செய்தி வெளியீடு எண்: 495 நாள்:25.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

# <u>இரயில்வே கடவு எண்.36க்கு மாற்றாக ஊரப்பாக்கம் அருகில் வண்டலூர் கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் சாலை மேம்பாலம் கட்டும் பணிகளை</u> மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் <u>இன்று (25.07.2021) ஆய்வு மேற்கொண்டார்கள்</u>

இந்த இரயில்வே மேம்பாலம் ரூ.37.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இக்கடவுக்கும், தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையே உள்ள சாலையின் நீளம் குறைவாக உள்ளதால் பாலத்தின் அணுகுசாலை தடுப்புச் சுவர் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் உள்ள NH45 இல் அமைந்துள்ளது.

இம்மேம்பாலப் பணிகள், மேல்தளப் பணிகள் மற்றும் ஓட்டேரிப் பக்கம் உள்ள பணிகள் முடிவடைந்துள்ளது. துறை அலுவலர்களை அழைத்துத் தமிழகத்தில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் எனவும், அதோடு மட்டுமல்லாமல் பாலப்பணிகள் நடைபெறுகின்ற பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் **<u>வண்டலூர் கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் சாலை மேம்பாலம் கட்டும் பணிகள்</u>** மெத்தனப்போக்குடன் பல ஆண்டுகளாக நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தது. அதன் அடிப்படையில் இன்று தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அணுகுசாலை பணிகள் நடைபெற்று

வருவதை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளைத் துரிதப்படுத்தி **31.10.2021க்குள்** முடித்துப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அவர்கள், இந்த இரயில்வே பாலப் பணி முடிந்தால் தற்போது புதிதாகக் கட்டப்பட்டு வரும் ஊரப்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்திற்குக் காஞ்சிபுரம் மார்க்கமாக வரும் பேருந்துகள் வந்து செல்ல எளிதாகவும் வசதியாகவும் இருக்கும் எனத் தெரிவித்தார்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில் ஆய்வு செய்து புதிய பாலங்கள் கட்டப்படும் எனத் தெரிவித்தார். மழைக்காலம் தொடங்க இருப்பதால் வெள்ளநீர் அடைப்புகளைப் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வெள்ளநீர் வடிகால் முகப்புகளை சீரமைக்கப் பணி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வில், கண்காணிப்புப் பொறியாளர் திரு.சுப்பிரமணியன் மற்றும் கோட்டப் பொறியாளர் திரு.செல்வகுமார் மற்றும் நெடுஞ்சாலைத்துறை உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**